BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையினரில் மூன்றாம் நபருக்கு கோவிட் -19 தொற்று (COVID-19) இருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பது பற்றிய ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தின் அறிக்கை

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல்10, 2020) - ஏப்ரல் 9 ஆம் தேதி வியாழக்கிழமையன்று ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தின் சாண்டல்வுட் (Sandalwood) கிளையில் பேருந்து பணியாளர் ஒருவருக்கு கோவிட் -19 (COVID-19) தொற்று இருப்பது பற்றி ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்டது. ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து பொருத்தவரை, இதுவே தொற்று உறுதி செய்யப்பட்ட மூன்றாவது நிகழ்வாகும்.

இந்தச் சமயத்தில், தொற்றுக்கு ஆட்பட்ட அந்த நபர் மற்றும் அவரின் குடும்பத்திற்கு ஆதரவு அளிப்பதுவும் மற்றும் நமது பணியாளர்கள், பயணிகள் மற்றும் சமுதாயத்தினரின், ஆரோக்கியம் மற்றும் மற்றும் பாதுகாப்பினைப் போற்றிக்காப்பதுவும் நகர நிர்வாகத்தின் முன்னுரிமை கொண்ட விஷயமாகும்.

நகர நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்ட உடனேயே, பீல் ப்பளிக் ஹெல்த் (Peel Public Health) உடன் இணைந்து  இது விஷயமாக விசாரித்து அடுத்த நடவடிக்கைகளைத் தீர்மானிக்க பணியாளர்கள் உடனடியாக ஈடுபடுத்தப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட இந்தத் தனி நபர், பின் வரும் வழித்தடங்களில் வேலை கடைசியாக செய்த தேதியானது கடந்த ஏப்ரல் 3 ஆம் தேதி ஆகும்.:

- தடம்  501 ஸூம் க்வீன்
- தடம்  502 ஸூம் மெயின்

மேற்சொன்ன வழித்தடங்களில் ஓடிய பேருந்துகளில் பயணித்த, நலமாக இருப்பதாக உணருகின்ற, தொற்றுக்கான அறிகுறிகள் இல்லாத,  பயணிகள் தங்கள் பணிகளை வழக்கம் போல் செய்யலாம், பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) ஐ அழைக்க வேண்டியதில்லை.  தொற்றுக்கான அறிகுறி தோன்றினால் மட்டும் பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) ஐ அழைக்கவும். உங்களுக்கு அவசர மருத்துவ உதவி தேவைப்பட்டால் எண் 911 ஐ அழைக்கவும்.

சமுதாயத்தில் பொதுவாக ஏற்படக்கூடிய தொற்றுப்பரவலைக் காட்டிலும், பொதுப் போக்குவரத்து சேவையின் பேருந்தில் எந்த வித கூடுதல் ஆபத்தும் இல்லை என பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) சுட்டிக்காட்டுகிறது.

கோவிட் -19 (COVID-19) தொற்று பரவலுக்கு எதிராக நமது பணியாளர்கள், பயணிகள் மற்றும் சமுதாயத்தினரைக் காப்பதற்கான ஒவ்வொரு செயலையும் தொடர்ந்து செய்வோம் என நகர நிர்வாகம் உறுதி கூறுகிறது.

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத் தூய்மைப்படுத்தி சுகாதாரப்படுத்தும் வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்சமயம், பேருந்துகள் அனைத்தும் 24 மணிக்கொரு முறை கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக்கப்படுகின்றன. வசதியமைப்பு கட்டிடங்கள், பேருந்து முனையங்களில் உனவருந்தும் இடங்கள், மேஜைகள், கவுன்ட்டர்கள், மற்றும் கதவு கைப்பிடிகள் நாளொன்றுக்கு இரண்டு முறை தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படுகின்றன்.

பேருந்து இயக்குபவர்கள் மற்றும் பயணிகளுக்கு இடையே உடல்ரீதியான இடைவெளி விட்டு விலகியிருத்தலைக் கடைப்பிடிப்பதற்காக பின் வரும் நடவடிக்கைகள் அமலில் உள்ளன:

- பேருந்தில் இருக்கும் இருக்கை எண்ணிக்கையில் பாதியளவுக்கே பயணிகள் ஏற்றப்படுகின்றனர்.
- பேருந்தின் பின்வாசல் வழியாக ஏறுதல் மற்றும் கட்டணமில்லா இலவச பயணம் இப்போதும் உண்டு. கூடவே, பயணிகளுக்கும் பேருந்தை இயக்குபவருக்கும் இடையில் காலியிடம் விடுவதற்காக பிளாஸ்டிக்கினால் ஆன சங்கிலி போன்ற தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது; சக்கர நாற்காலி போன்ற சாதனங்களில் வருவோர் பேருந்தில் ஏற முன் வாசலை வழக்கம்போல தொடர்ந்து உபயோகிக்கலாம்.
- பயணிகள் கூட்டம் அதிகம் உள்ள வழித்தடங்களில் தொடர் வண்டி போன்ற ஆர்ட்டிகுலேட்ட்ட் பேருந்துகள் விடப்படுகின்றன; இதனால் பேருந்தில் இருக்கும் பயணிகள் ஒருவருக்கு ஒருவர் உடல்ரீதியான இடைவெளி விட்டு விலகியிருத்தலைக் கடைப்பிடிக்க இயலும்.
- சில இருக்கைகளில் குறியீடுகள் இட்டு வைத்து பயணிகள் அவற்றில் அமரக்கூடாது என கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
- வார இறுதி நாட்களில் மற்றும் வழக்கமாகவே கூட்டம் இருக்கும் தடங்களில், பயணிகள் உபயோகம் குறைவாக இருப்பவை ரத்து செய்யப்பட்டுள்ளன, மற்றும் பயணிகள் ஒருவருக்கு ஒருவர் உடல்ரீதியான இடைவெளி விட்டு விலகியிருத்தலைக் கடைப்பிடிப்பதற்காக, கைவசம் இருக்கும் பேருந்துகள், கூட்டம் அதிகம் உள்ள வழித்தடங்களுக்கு திருப்பி விடப்பட்டன.

நகர நிர்வாகம் பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) உடன் நெருங்கி பணியாற்றி வருகிறது. ஆய்வு நடந்துகொண்டிருப்பதால், புதிய தகவல்கள் கிடைக்கும்போது உடனுக்குடன் தெரிவிக்கப்படும்.

-30-

கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும்,  சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும்  Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள்.   www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய  ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
*905-874-3426 | Monika.Duggal@brampton.ca*